# INTERNATIONAL INDIAN SCHOOL –DAMMAM

## MIDDLE SECTIONS

### ANNUAL EXAM WORK SHEET- 2023 -24

**CLASS – VIII** **SUB - TAMIL**

**அ. கீழ்க்காணும் பத்தியைப் படித்து உணர்ந்து, கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க**.

தமிழ்ப் பெண்களின் தவ விளக்காக ஒளிர்ந்தவர் டாக்டர் முத்துலெட்சுமி அம்மையார். .கல்வி பயிலும் காலத்திலேயே மகாகவி.பாரதியார், சரோஜினி நாயுடு, அன்னிபெசன்ட் ஆகியோரின் நட்பு இவருக்குக் கிட்டியது. இவரது உள்ளத்தில் விடுதலைச் சிந்தனை மட்டுமில்லாமல் பெண் முன்னேற்றச் சிந்தனையும் தோன்றியது. வாழ்வில் திக்கற்றவர்களாய் நின்ற பெண்களுக்கும், ஆதரவற்றவர்களாய் நின்ற குழந்தைகளுக்கும் அவரது இல்லத்திலேயே 'ஔவை இல்லம்' தொடங்கினார். இவர் முதல் இந்தியப் பெண் மருத்துவராகவும், சட்டப்பேரவைத் துணைத் தலைவராகவும் திகழ்ந்தார்.

**வினாக்கள்** :-

1.டாக்டர் முத்துலெட்சுமிக்கு யாவருடைய நட்பெல்லாம் கிடைத்தது?

2.இவரது உள்ளத்தில் தோன்றிய சிந்தனைகள் எவை?

3.'ஔவை இல்லம்' எதற்காகத் தொடங்கப்பட்டது?

4.முத்துலெட்சுமி வகித்த பதவி எது?

5.மேலே உள்ள பத்தியில் யாரைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது?

**ஆ. கீழ்க்காணும் பத்தியைப் படித்து, உணர்ந்து, கேட்கப்பட்ட பல்விடை கேள்விகளுக்கு விடையளிக்க.**

புரட்சிப் பூக்கள் பூத்துக் குலுங்கிய புதுவையில் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார் அவர்கள் 1891 ஆம் ஆண்டு பிறந்தார். கனகசபை என்பார் இவரின் தந்தையாவார். கவிஞரின் இயற்பெயர் சுப்புரத்தினம் ஆகும். இவர் துடுக்கடக்கப் பள்ளியில் சேர்ந்து படித்து, தித்திக்கும் முத்தமிழ்ப் புலமை பெற்றார்.

தமிழாசிரியராய் பணியாற்றினார். பாரதியாரால் 'சுப்புரத்தினம் ஒரு கவி' என்று அறிமுகம் செய்து வைக்கப்பட்டார். இவர், பாரதியிடம் தாம்கொண்ட அன்பால் தம்பெயரைத் பாரதிதாசன் என்று மாற்றி வைத்துக் கொண்டார். அவரின் எண்ணம்,

எழுத்து, பேச்சு இவைகளில் புரட்சியைக் கண்ட அறிஞர்உலகம் இவரைப் 'புரட்சிக் கவிஞர்' என அழைத்து மகிழ்ந்தது.

**வினாக்கள்** :-

1. பாரதிதாசன் அவர்களின் தந்தை யார்?

    அ. பாரதியார் ஆ.சுப்புரத்தினம் இ. கனகசபை

2. பாரதிதாசன் ________ ஆசிரியராய் பணியாற்றினார்.

    அ. கணித ஆ. தமிழ் இ. அறிவியல்

3. இவர்மீது கொண்ட அன்பால் தம்பெயரை பாரதிதாசன் என மாற்றிக் கொண்டார்.

    அ. வள்ளலார் ஆ. பாரதியார் இ. ஔவையார்

4. அறிஞர்உலகம் பாரதிதாசனாரை எவ்வாறு பாராட்டியது?

    அ. புரட்சிக்கவிஞர் ஆ. புரட்சித்தலைவர் இ. புரட்சிநாயகன்

5. பாரதிதாசனார் பிறந்த ஊர் __________

    அ. தஞ்சை ஆ. புதுவை இ. நூாகை

இ. சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு என்னும் தலைப்பில் **கட்டுரை** எழுதுக.

ஈ. நூலகம் அமைத்துத் தர வேண்டி நூலக இயக்குநருக்குக் **கடிதம்** எழுதுக

**அல்லது**

வெற்றிபெற்ற நண்பனைப் பாராட்டிக் **கடிதம்** எழுதுக.

## இலக்கணம்

**அ. சான்று தருக**.

1. பண்பாகு பெயர்
2. இடவாகு பெயர்
3. ஆறாம் வேற்றுமை
4. உம்மைத்தொகை
5. பண்புத்தொகை
6. அன்மொழித்தொகை
7. இரண்டாம் வேற்றுமை

8. ஏழாம் வேற்றுமை
9. அடுக்குத்தொடர்
10. விகாரப்புணர்ச்சி
11. தோன்றல் விகாரம்
12. உயிர்முன் உயிர்
13. பெயரெச்சத்தொடர்

**ஆ. நிரப்புக.**

1. ஆகுபெயர் _____________ வகைப்படும்.
2. மூன்றாம் வேற்றுமை உருபு _____________
3. தொகாநிலைத் தொடர்
4. வண்டி _____________ வென ஓடியது.
5. வா வா வா என்பது ___________ ஆகும்.
6. அல் + திணை என்பது _____________ என புணரும்.
7. ______________ என்பன உடம்படுமெய் ஆகும்.
8. புணர்ச்சி ______________ வகைப்படும்.
9. வேற்றுமை உருபு வெளிப்படையாக வரும் தொடர் ______________ ஆகும்.
10. கண், உள் என்பன _____________ வேற்றுமை உருபுகள் ஆகும்.
11. சினையின் பெயர் அதன் முதற்பொருளுக்கு ஆகி வருவது _______________
12. வெள்ளை அடித்தான் என்பது _________ ஆகும்.

**இ. இலக்கணக்குறிப்பு தருக.**

1. 1.டிசம்பர் சூடினாள்
2. தலைக்கு ஒரு வினாற்றாள் கொடு
3. கண்ணன் செல்வத்தை உடையவன்
4. தேர்வுக்குப் படி
5. சுடுசோறு
6. வெண்ணிலவு
7. வெற்றிலை பாக்கு
8. மற்றொன்று
9. கிளியே பேசு!

10. நனி மகிழ்ந்தாள்

**ஈ. அடைப்புக்குள் கூறியவாறு செய்க.**

1. நீல நிறமுடைய மலர்களைச் சூடினாள் (பண்பாகு பெயராக மாற்றுக.)
2. ஊரே திரண்டு வந்தது (ஆகு பெயர் நீக்கி எழுதுக.)
3. ஆறுமுகனுடன் வள்ளிமயில் சென்றாள் (வேற்றுமை உருபை எடுத்தெழுது.)
4. இராமன் வந்தான் (எவ்வகை வேற்றுமை? )
5. கயல்வி (எவ்வகை சொற்றொடர்? )
6. செய்தொழில் (எவ்வகைத் தொகை? )
7. சாலப் பசித்தது (உரிச்சொல் எது? )

**உ. சரியான வாக்கியம் எது?**

1. அ) ஆகுபெயர் ஆறு வகைப்படும்.
   ஆ) ஆகுபெயர் எட்டு வகைப்படும்.
   இ) ஆகுபெயர் பன்னிரண்டு வகைப்படும்.
   ஈ) ஆகுபெயர் பதினாறு வகைப்படும்.

2. அ) பொன் + கோவில் - இயல்புப் புணர்ச்சி
   ஆ) பொன் + கோவில் - திரிதல்விகாரம்
   இ) பொன் + கோவில் - கெடுதல்விகாரம்
   ஈ) பொன் + கோவில் - தோன்றல் விகாரம்

3. அ) காளையன் வந்தான் - வினைத்தொகை
   ஆ) காளையன் வந்தான் - பண்புத்தொகை
   இ) காளையன் வந்தான் - உவமைத்தொகை
   ஈ) காளையன் வந்தான் - அன்மொழித்தொகை

**உ. பொருத்துக**

1. இடை + அழகு - மெய் முன் மெய்
2. மண் + அகல் - உயிர்முன் மெய்
3. கிளி + மூக்கு - மெய் முன் உயிர்
4. மரம் + கிளை - உயிர் முன் உயிர்

# செய்யுட்பகுதி

## நானிலம் படைத்தவன்

**அ. பொருள் தருக.**

1. கழனி
2. எக்களிப்பு
3. கலம்
4. ஆழி
5. மறம்
6. சமர்

**ஆ. நிரப்புக.**

1. போர்க்களத்தில் வெளிப்படும் குணம் ______________
2. திராவிட நாட்டின் வானம்பாடி என்று பாராட்டப் பெற்றவர் ______ .
3. கல்லெடுத்து என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _______.
4. நானிலம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________

**இ. சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

1. மாநிலம்
2. கடல்

**ஈ. விடை தருக.**

1. தமிழன் எதற்காகக் கண்டங்களைச் சுற்றி வந்தான் ?
2. நான்கு நிலங்கள் என்பன யாவை ?
3. தமிழன் தான் வாழ்ந்த நாட்டினை எவ்வாறு உருவாக்கினான் ?

## பராபரக்கண்ணி

**அ. பொருள் தருக.**

1. தண்டருள்
2. பராபரமே
3. பணி

**ஆ. நிரப்புக**

1. சோம்பல் என்னும் சொல்லுக்குரிய பொருத்தமான எதிர்ச்சொல் ______.

2. தமிழ் மொழியின் உபநிடதம் என அழைக்கப்படும் நூல் ___________ .

**இ. விடை தருக.**

1. இன்பநிலை எப்போது வந்து சேரும் ?
2. யாருக்குத் தொண்டு செய்ய வேண்டும் ?

## திருக்குறள் (பகுதி-2)

**அ. நிரப்புக.**

1. ஏழைகளுக்கு உதவி செய்வதே ______ ஆகும்.
2. உள்ளத்தில் ______ இல்லாமல் இருப்பதே சிறந்த அறமாகும்.
3. எனைத்தானும் ___________ யார்க்கும் மனத்தானம்
4. மாணாசெய் யாமை ___________

**ஆ. விடை தருக.**

1. அறநூல்களில் கூறப்படும் அறங்களுள் சிறந்தது எது ?
2. அறம் என்பது யாது ?
3. துன்பம் செய்தவரைத் தண்டிக்கும் வழியாக வள்ளுவர் கூறுவது யாது?

**அடிமாறாமல் எழுதுக**

1. ‘எல்லாரும்’ எனத் தொடங்கும் பராபரக்கண்ணி பாடலை எழுதுக.
2. ‘இன்னா’ எனத் தொடங்கும், ‘குறளையும்’ தலை என முடியும் குறளையும் எழுதுக.

## உரைநடைப்பகுதி

## வளரும் வணிகம்

**அ. நிரப்புக.**

1. வீட்டுப் பயன்பாட்டிற்காகப் பொருள் வாங்குபவர் ___________ .
2. வண்ணப்படங்கள் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _______.
3. வணிகம் + சாத்து என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் __________

4. பண்டம் + மாற்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் __________

**ஆ. சொற்களைச் சொந்தத் தொடரில் அமைத்து எழுதுக.**

1. சில்லறை -
2. ஏற்றுமதி -
3. கப்பல்-

**இ. விடை தருக.**

1. சிறு வணிகப் பொருட்கள் யாவை ?
2. வணிகச்சாத்து என்றால் என்ன ?
3. சிறுவணிகம் எவ்வாறெல்லாம் நடைபெறும் ?
4. பண்டமாற்று முறைக்கு எடுத்துக்காட்டுகள் தருக.
5. பெருவணிகம் - குறிப்பு எழுதுக.

## பசிப்பிணி போக்கிய பாவை

**நிரப்புக.**

1. மணிமேகலா தெய்வம் மணிமேகலையை அழைத்துச் சென்ற தீவு ________
2. புத்த பீடிகையின் காவல்தெய்வம் ______ .
3. மணிமேகலை கையில் இருந்த அமுதசுரபியில் உணவு இட்ட பெண் _______

**ஆ. சொற்களைச் சொந்தத் தொடரில் அமைத்து எழுதுக.**

1. அமுதசுரபி -
2. முழுநிலாநாள் -
3. நல்லறம் -

**இ. விடை தருக.**

1. மணிமேகலை மன்னரிடம் வேண்டியது யாது ?
2. கோமுகி பொய்கை என்பதன் பொருள் யாது ?
3. அமுதசுரபியின் சிறப்பு யாது ?
4. மணிமேகலை அமுதசுரபியின் உதவியால் யாருக்கெல்லாம் உணவளித்தாள் ?
5. மணிமேகலை யார், எந்த ஊரைச் சேர்ந்தவள் ?

## வளர்தமிழ்

**அ. பொருள் கூறுக**

1. தொன்மை -
2. மா -

**ஆ. பிரித்தெழுதுக.**

1. இடப்புறம் -
2. சீரிளமை -

**இ. சேர்த்தெழுதுக.**

1. கணினி + தமிழ் -
2. சிலம்பு + அதிகாரம் -

**ஈ. நிரப்புக.**

1. தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான இலக்கணநூல் _______________
2. மொழியைக் கணினியில் பயன்படுத்த வேண்டும் எனில் அது ____________ அடிப்படையில் வடிவமைக்கப்பட வேண்டும்.
3. நாம் சிந்திக்கவும் சிந்தித்ததை வெளிப்படுத்தவும் உதவுவது _______________.

**உ. தொடர் அமைக்க.**

1. தனிச்சிறப்பு -
2. நாள்தோறும் -

**ஊ. பொருத்துக.**

1. தமிழ் இலக்கண நூல்கள் - தொல்காப்பியம், நன்னூல்
2. தமிழ் அறநூல்கள் - திருக்குறள், நாலடியார்
3. தமிழ் காப்பியங்கள் - சிலப்பதிகாரம், மணிமேகலை
4. தமிழ் சங்க இலக்கியங்கள் - எட்டுத்தொகை, பத்துப்பாட்டு

**எ. குறுகிய விடை தருக.**

1. பூவின் ஏழு நிலைகள் யாவை ?
2. மா - என்னும் ஒரு சொல் தரும் பல பொருள்களை எழுதுக.
3. இன்றைய அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப தமிழில் உருவாகியிருக்கும் கலைச்சொற்களை எழுதுக.
4. தமிழ் மூத்த மொழி எனப்படுவது எதனால் ?
5. அ.்.றிணை, பாகற்காய் ஆகிய சொற்களின் பொருட்சிறப்பு யாது ?

**துணைப்பாடம்**

**'உழைப்பே மூலதனம்'** என்னும் பெயரில் அமைந்த துணைப்பாடக் கட்டுரையை எழுதுக.

************